

# ANNAI WOMEN'S COLLEGE

**(Arts and Science)**

**(Affiliated to Bharathidasan University – Tiruchirapalli.)**
**TNPL Road, Punnamchathram, Karur.-639136**

## TAMIL DEPARTMENT

## COURS MATERIAL

அலகு 1 :- திருஞான சம்பந்தர் (திருமுறை மலை)

~~அலகு 2~~ :- திருநாவுக்கரசர் தேவாரம்

சுந்தரர் (திரு அஞ்சைக் களம்)

அலகு 2 :- திருவாசகம் - திருவெம்பாவை

அலகு 3 :- பெரியாழ்வார் திருமொழி

நாச்சியார் திருமொழி (1-20 பாடல்)

அலகு 4 - தேம்பாவணி (குகவரை படலம்)

அலகு 5 - சீறாப்புராணம் (ஓநாய் பேசிய படலம்)

திருஞானசம்மந்தர் (அலகு 1)

# திருவீழிமிழலை

1. சடை முடியில் கங்கையைத் தரித்தவனும், இடையினின்று சரிந்து நழுவும் ஒப்பற்ற கோவண ஆடையை அணிந்தவனும், மழுப் படையை உடையவனும், பலவகையான பூதங்களைப் படையாகக் கொண்டவனும், மடமைத் தன்மை பொருந்திய மான்விழி போன்ற விழிகளை உடைய உமையம்மையாகிய பெண்ணை இடப்பாகத்தே கொண்டவனும், என்னை ஆளாக உடையவனும், விடைக்கொடி உடையவனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய இடம் திருவீழிமிழலை.

2. ஊழிக் காலத்தில் அனைத்தையும் ஒடுக்குவோனாய், ஒடுங்கிய உடலைத் தானொருவனே முதற்பொருளாய் நின்று தோற்றுவிப்பவனாய், சக்தி சிவம் என இருவகைப்பட்டவனாய், முக்குண வடிவினனாய், எக்காலத்தும் மாறுபடாத நான்மறை வடிவினனாய், ஐம்பெரும்பூதங்கள், ஆறுசுவை, ஏழு ஓசை, எட்டுத்திசை ஆகியவற்றில் நிறைந்தவனாய், உயிரோடு ஒன்றாகியும், வேறாகியும், உடனாகியும் விளங்கும் இறைவனது இடம் திருவீழிமிழலை.

3. அன்றலர்ந்த மலர்களைச் சாத்தி வணங்கி உய்தி பெற அடியவர்களே வாருங்கள். உயர்ந்த உம் அன்போடு எம் அன்பையும் ஏற்றருளும் இறைவன் உறையும் கோயில், மும் என்ற ஒலிக்குறிப்போடு இசைபாடும் வண்டுகள் மலர்களைக் கிளறுவதால் திசையெங்கும் மணம் கமழும் பொழில்கள் சூழ்ந்ததும், தண்ணிய வயல்களைக் கொண்டதுமாகிய திருவீழிமிழலை.

4. இசையும், அதற்கு அடிப்படையான ஏழு சுரங்களும் வல்லோசை, மெல்லோசை முதலியனவற்றையுடைய தமிழும் உள்ளத்துணர்வாகிய சுவையும், பொருந்திய தாள வேறு பாட்டு ஒலிகளும், மண், புனல், உயிர், காற்று, நெருப்பு, சூரியன், சந்திரன், விண் ஆகிய எண்வகை வடிவங்களும் ஆகிய இறைவனது இடம் திருவீழிமிழலை

5. சுருதி, யுக்தி, அநுபவங்களால் ஆராய்ச்சி செய்யாத பல சமயங்களால் அறியப் பெறாதவன். அறநெறிகளின் தாயாய் விளங்குவோன். எல்லா உயிர்கட்கும் அநாதியாகவே தலைவன். வேத வேள்விகளில் முத்தீ வடிவினன். சிவன் எனும் திருப்பெயருடையவன். எங்கட்குத்தலைவன். செல்வம் நிறைந்த திருவாரூரில் எழுந்தருளியிருப்பவன். அத்தகையோன் உறையுமிடம் திருவீழிமிழலை.

Scanned with CamScanner

6. சிவபிரான் கல்லால மரநிழற்கீழ் யோகியாய் வீற்றிருந்த காலத்து அசுரர்களால் இடருழந்த வானோர் காவாய் என வேண்ட, சூரிய சந்திரராகிய சக்கரம் பூட்டிய பூமியைத் தேராகக் கொண்டு நான்முகன் வேதங்களாகிய தேரிற் பூட்டிய குதிரைகளைச் செலுத்த, அக்கினிதேவனை வலிய வாயாகவும், வாயுதேவனை இறகாகவும் கொண்ட திருமால் ஆகிய அம்பை வாசுகி என்னும் பாம்பினை நாணாகப் பூட்டி மேருமலையாகிய வில்லால் செலுத்தித் திரிபுரங்களை எய்து அழித்த சிவபிரானது இடம் திருவீழிமிழலை

7. பிரமகபாலம் பொருந்திய திருக்கரத்தினன். யானையை உரித்ததால் கிடைத்ததொரு மேற்போர்வையினன். முப்புர அசுரர் அழியத் தன்னடி பணிந்த அம்முப்புரத்தலைவர் மூவர்கட்கும் மிக்க வரங்களை அளித்தவன். அப்பெருமானது இடம், வளர்ந்தோங்கிய புன்னை மரங்கள் முத்துக்கள் போல் அரும்பி மலர்ந்து பொன்தாதுக்களை ஈன்று பச்சை மணிகளைப்போல் காய்த்து அழகு செய்கின்ற திருவீழிமிழலையாகும்.

8. தன்னை எதிர்த்து நிற்பார் யாரும் இல்லாத வலிமை பெற்ற அரக்கனாகிய இராவணன் வடதிசையிலுள்ள கயிலாயமலையைப் பற்றித் தூக்கினான். அவன் தலைகள் தோள்கள் ஆகியன நெரிய ஊன்றி அதனால் இடருழந்த அவன் பின்னர்ப் பணிந்தேத்த அவனுக்குப் பெரிதாகிய வாள், இராவணன் என்ற பெயர் ஆகியனவற்றைக் கொடுத்தருளிய மின்னல் போலப் பொலியும் சடைமுடியை உடைய சிவபிரானது இடம் திருவீழிமிழலையாகும்.

9. முன்னொரு காலத்து ஏழுலகையும் தன் வயிற்றில் அடக்கிக்காட்டிய திருமாலும், அவ்வுலகங்களைப் படைத்தருளிய நான்முகனும் தன்னை அறியாதவாறு ஒளி பொருந்திய தீயுருவான சிவபிரான் உறையும் கோயில்; நீர் நிறைந்த பொய்கைகளில் பூத்த செழுமையான தாமரை மலர்மீது இள அன்னம் நடை பயில வெண் தாமரை சிவந்த தாதுக்களை உதிர்க்கும் திருவீழிமிழலையாகும். அன்னத்தின் நிறத்தால் செந்தாமரை வெண்தாமரை ஆயிற்று. அதன் கால்களின் செம்மையால் பொன்னிறத்தாதுக்கள் செந்தாதுக்கள் ஆயின

10. மயக்க உணர்வுடையவரும், பிச்சை ஏற்கும் மண்டை என்னும் பாத்திரத்தைக் கையின்கண் ஏந்தியவரும், நற் குணங்கள் இல்லாதவர்களும் ஆகிய சமணர், புத்தர்கள் நிற்கத் தன்னை வழிபடும் அன்பர்கட்கு வினைவயத்தாற் பொருந்திய

Scanned with CamScanner

பிறப்பினைப் போக்கியவன் எழுந்தருளிய இடம், மிகுதியான தேனீக்கள் தேனை உண்டு களித்து ஒலி செய்யவும், பசுமை நிறமேனியும் பொன் நிறக்காலும் உடைய கிளிகளும், களிப்புற்ற மயில்களும் நிறைந்ததும் ஒளியோடு தோன்றும் கதிரவன் இருக்கும் வான மண்டலத்தை அழகுறுத்துவதும் ஆகிய பொழில் சூழ்ந்த திருவீழிமிழலையாகும்.

ll. வீழிமிழலையுள் எழுந்தருளிய விகிர்தனாகிய இறைவனைப்பற்றி மணம் பொருந்திய சீகாழிப் பதியில் தோன்றிய கலைவல்ல ஞானசம்பந்தன் பாடியருளிய பாடல்கள் பத்தினையும் யாழிசையில் பாட வல்லார்களும் சொல்லக் கேட்டார்களும் ஆகிய அனைவரும் ஊழாக அமைந்த வினைகள் நீங்கச் சிவப்பேறு எய்துவர்.

Scanned with CamScanner

சுந்தரமூர்த்தி தேவாரம் (திருஅஞ்சைக்களம்)

நிகர்:

மலைக்கு நிகராகிய தன்மையால் தம்மில் ஒப்பனவாகிய வலிய அலைகள் வலம்புரிச் சங்குகளைப் பற்றி ஈர்த்து வந்து எறிந்து முழங்கி மோதுகின்ற கடலினது அழகிய கரையின் கண்ணதாகிய ` மகோதை ` என்னும் நகரத்தின்கண் உள்ள, அழகு நிறைந்த சோலைகளையுடைய, ` திருவஞ்சைக்களம் ` என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற தந்தையே, நீ தலைக்கு அணிகலமாகத் தலைமாலையை அணிந்தது என் ? சடையின்மேல், ` கங்கை ` என்னும் ஆற்றைத் தாங்கியது என் ? கொல்லும் தன்மை யுடைய புலியினது தோலை உரித்தெடுத்து அரையில் உடுத்தது என் ? அவ்வுடையின்மேல் சினத்தையுடைய பாம்பைக் கச்சாகக் கட்டியது என் ?

வடிவம்:

வலிய அலைகள் தம் வடிவத்தைச் சுருளாகச் செய்து ஓடிவந்து மோதுதலினால், கரு வளர்கின்ற சங்குகள் வாய் திறந்து முத்துக்களை ஈன, இங்ஙனம் அலைத்து முழங்குகின்ற கடலினது அழகிய கரையின்கண்ணதாகிய, ` மகோதை ` என்னும் நகரின்கண் உள்ள, அழகு நிறைந்த சோலைகளையுடைய திரு வஞ்சைக்களம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற தந்தையே, நீ, விரும்பத் தகாத பாம்பை, பிடித்து ஆட்டுதலையும், பூணாகப் பூணுதலையும் மேற்கொண்டது என் ? விளங்குகின்ற சடையின்கண் பிறையைச் சூடியது என் ? சாம்பலை எடுத்து உடம்பு முழுதும் பூசிக் கொண்டது என் ? இழிந்த எருதினையே ஊர்தியாகக் கொள்ள விரும்பியது என் ?

மூங்கில்களையுடைய பெரிய மலைகள் போலும் அலைகள் இடைவிடாது மோதுகின்ற கடலினது அழகிய கரையின் கண்ணதாகிய, அழகு நிறைந்த சோலைகளையுடைய திருவஞ்சைக் களம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற தந்தையே, உன்னை நினைந்து துயிலுணர்வார்க்கு நெல்லிக்கனி போன்றவனே, முனிவர்கட்கெல்லாம் முனிவனே, தேவர்கட்கெல்லாம் தேவனே, உன்னை உள்ளந்தெளியப்பெற்றால், சிறியாரும் பெரியாராவர். விரைந்து வந்து உன்னை வணங்குபவர், இறத்தலும் பிறத்தலும் இலராவர். அவரது உள்ளத்தைப் பிணித்தற்கு, நீ,

Scanned with CamScanner

மாலைக் காலத்தில் தோன்றும் செவ்வானம் போலும் அழகிய திருமேனியை உடையையாய் இருக்கின்றனை.

துளிகளைத் தூற்றுதலால் மேகத்திற்கு நிகராகும் தன்மையில் தம்மில் ஒப்பனவாகிய வலிய அலைகள், பல பொருள்களை ஈர்த்து வந்து மோதி முழங்கி, வலம்புரிச் சங்கின் இனிய ஓசையால் யாவரையும் தன்பால் வருவிக்கின்ற கடலினது அழகிய கரையின் கண்ணதாகிய, ` மகோதை ` என்னும் தலத்தில் உள்ள அழகு நிறைந்த சோலைகளையுடைய திருவஞ்சைக்களம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற தந்தையே, நீ, உலகத்தை இயக்குதலில், எழுதப்படும் எழுத்துக்களுக்கு உயிரெழுத்துப் போல்கின்றாய் ; இல்லா தாய் போல்கின்றாய் ; ஆயினும் உள்ளாய் போல்கின்றாய் ; உயிர்கட்கு உதவுதலில் தளிர்க்கும் பயிர்க்கு மேகம் போல்கின்றாய் ; அடியார்களுக்கு அணியையாதலில், அவரோடு ஒருகுடிப் பிறப்பினை போல்கின்றாய்.

பொன், மணி முதலிய செல்வங்களைத் தந்த மரக்கலங்களினது செலவினையுடைய, மூழ்குதற்குரிய கடலினது அழகிய கரையின்கண்ணதாகிய, ` மகோதை ` என்னும் நகரின்கண் உள்ள, அழகு நிறைந்த சோலைகளையுடைய திருவஞ்சைக்களம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தந்தையே, நீ, ` வீடு, பிறப்பு ` என்னும் இரண்டனுள் ஒன்றையே அமையாது, மறுதலைப் பொருள்களாகிய அவ்விரண்டனையும் அமைத்ததன் பயன் யாது ? மதத்தையுடைய யானை இருக்க, எருதினை ஊர்வது என் ? திருமேனியில் நீங்காது பொருந்தியுள்ள மலைமகளாகிய ஒருத்தியோடு கங்கை என்பவளையும் சடையில் வைத்தது என் ? உன்னைப் பாடுகின்ற புலவர்க்கு நீ அளிக்கும் பரிசில் யாது

யாவர்க்கும் மேலானவனே, எல்லார்க்கும் மேலிடத்தில் உள்ளவனே, வலிமையோடு, ` சங்கு, இப்பி, முத்து ` என்பவற்றைக் கொணர்ந்து வீசி, வலம்புரிச்சங்கை மேலே கொண்டு முழங்கி, ஆர்ப்பரவத்தையுடையதாகின்ற கடலினது அழகிய கரையின்கண்ணதாகிய ` மகோதை ` என்னும் நகரின்கண்

Scanned with CamScanner

உள்ள அழகு நிறைந்த சோலைகளையுடைய திருவஞ்சைக்களம் என்னும் திருக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் தந்தையே, நீ இராப் பொழுதில் புறங்காட்டில் எரியில் நின்று ஆடியது என் ? இறந்தவரது தலையில் பிச்சையேற்றல் என் ? உன்னை எத்தி வணங்குவோர் பெறும்பொருள் யாது ? சொல்லியருளாய்.

எப்பொருட்கும் தலைவனே, இன்பம் தருபவனே, விரும்புகின்ற நுகர்ச்சிப் பொருள்கள் எத்துணை வகையினவற்றையும் மிகுதியாக மரக்கலங்களில் ஏற்றி, நடுவண் செல்லச் செலுத்தி ஆரவாரிக்கின்ற கடலினது அழகிய கரையின்கண்ணதாகிய ` மகோதை ` என்னும் நகரின்கண் உள்ள, அழகு நிறைந்த சோலைகளையுடைய , ` திருவஞ்சைக்களம் ` என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தந்தையே, அடியேன் இதுபோழ்து உன்னை நன்குணர்ந்தேன் ஆதலின், ` எப்பொருளின் ஆக்கத்திற்கும், அழிவிற்கும் காரணன் நீயே ` என்றும், ` அவற்றிற்குக் காரணங்களாகப் பிற பிற வற்றைச் சொல்லுவாரது சொற்பொருள்களும் நீயே ` என்றும், ` புலனுணர்வுக்குக் காரணமான, ` நாக்கு, செவி, கண் ` என்பனவும் நீயே ` என்றும் துணிந்து சொல்லுவேன்.

ஒளிவிடுகின்ற குழையையணிந்த காதினையுடைய அந்தணனே, கடலினது அழகிய கரையின்கண்ணதாகிய ` மகோதை ` என்னும் நகரின்கண் உள்ள, அழகு நிறைந்த சோலைகளையுடைய ` திருவஞ்சைக்களம் ` என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற தந்தையே, நீ, இலங்கைக்கு அரசனாகிய இராவணனை அவனது பத்துத் தலைகளோடு பல தோள்களும் அற்று விழுவன போலும்படி நெரித்தாய் ; பாற்கடலில் தோன்றிய நஞ்சினை அமுதமாக உண்டு, கண்டம் கறுப்பாயினாய் ; பிரமன் தலைகள் ஐந்தனுள் ஒன்றை விரைவில் அறுத்தலும் செய்தாய் ; அடியேன் எனது மனை வாழ்க்கையை மனத்தாலும் வெறுத்தேன் ; உடம்பாலும் துறந்து விட்டேன்.

மூன்று அரண்கள், ஒருமுறை கைந்நொடிக்கும் அளவிலே எரிந்தொழியுமாறு வில்லை வளைத்தவனே, முத்துக்கள் முதலியவற்றை வடித்தெடுத்துச் சேர்ப்பனபோல, சில வலிய அலைகள் அவைகளை ஈர்த்து வந்து வீசி,

வலம்புரிச்சங்கினால், கரையி லுள்ளாரைத் தாக்குகின்ற கடலினது அழகிய கரையின்கண்ணதாகிய ` மகோதை ` என்னும் நகரின்கண் உள்ள அழகிய சோலைகளை யுடைய, ` திருவஞ்சைக்களம் ` என்னும் திருக்கோயிலில் எழுந்தருளி யிருக்கின்ற தந்தையே, நீ பெண்யானைக்கு ஆண்யானை போல உயிர் கட்கு யாண்டும் உடன்செல்லும் துணைவனாய் உள்ளாய் ; என் போலும் மக்கட்கும், பிரமன் திருமால் முதலிய தேவர்கட்கும் தலைவனாய் உள்ளாய் ; இவற்றையெல்லாம் உணர்ந்து, அடியேன் உன்னை மறத்தல் ஒழிந்தேன்.

என்போலும் அடியவர்கட்கு முதல்வனும், தேவர்கட்குத் தலைவனும், எனக்கு எஞ்ஞான்றும் அருள்பண்ணும் சிவனும் ஆகிய, அழகிய குளிர்ந்த கரையின் கண்ணதாகிய, ` மகோதை ` என்னும் நகரின்கண் உள்ள,` திருவஞ்சைக்களம் ` என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற தந்தையை, மத்தளமும் வேய்ங்குழலும், ` மந்தம் ` என்னும் அளவாக இயம்பப்படுகின்ற, நன்மை வளர்கின்ற திருநாவலூரில் உள்ளார்க்குத் தலைவனாகிய நம்பியாரூரன் போற்றிய இசை நலம் மிக்க, தமிழ்ச்சொற்கள் என்னும் மலர்களால் இயன்ற இம்மாலைகளை வாயிலாகக்கொண்டு அப் பெருமானது திருவடிகளில் பணிய வல்லவர் நிலையாமை நீங்கப் பெற்று, நிலைபேறுடையவராவர்.

Scanned with CamScanner

அலகு - 2

## திருவாசகம்-திருவம்மானை

பாடல் எண் : 1

திருமாலும் காண்பதற்கரிதாகிய திருவடி இந்தப் பூமியில் படும்படி திருப்பெருந்துறையில் எழுந்தருளி, எம்மையும் எம்மினத்தையும் ஆட்கொண்டு எமக்கு முத்தி நெறியையும் அருள் செய்தமையால் அந்த இறைவனது கருணையையும், திருவடியின் பெருமையையும் யாம் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 2

மண்ணுலகத்தார் விண்ணுலகத்தவர் முதலிய எல்லாராலும் காண்பதற்கரியனானவனும், திருப்பெருந்துறையில் எழுந்தருளி என்னைப் பித்தனாக்கினவனும், முத்தி வழியை அறிவித்தவனும், வலை வீசுதல் முதலிய திருவிளையாடல்களைச் செய்தவனும் கருணைக் கடலும் ஆகிய சிவபிரானைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 3

இந்திரன் முதலான தேவர்களும் முனிவர் முதலானோரும் விண்ணிலே நிற்க, எங்களை ஆட்கொள்ளும் பொருட்டுப் பூவுலகில் எழுந்தருளி, எங்கள் மனத்தை உருகச் செய்த திருப்பெருந்துறையான், எமக்கு அருள் செய்த முடிவற்ற இன்பத்தைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 4

சாதாரண தேவர்களும், திருமால் பிரமன் இந்திரன் முதலான பெரிய தேவர்களும், காட்டில் சென்று கடுந் தவம் செய்தும் காண்பதற்கு அரியனாகிய சிவபெருமான் தானே வலிய வந்து, அடியேனைத் தாய்போலக் கருணை செய்து, என் உடல் உயிர்கள் உருகச் செய்தமையால், அவன் திருவடியைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 5

கற்றறிவு இல்லாமையால் கடையாகிய என்னையும் ஒரு பொருளாய் மதித்து ஆட்கொண்டு, கல்லை நிகர்த்த என் மனத்தைக் குழைத்துத் தன் கருணைக் கடலில் அழுந்தும் படிசெய்து என் வினையை ஒழித்தருளிய நம் சிற்றம்பலவனைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 6

தோழி! திருப்பெருந்துறையான் காட்டாதன எல்லாம் காட்டி, சிவகதியைக் காட்டி, தன் திருவடியைக் காட்டி, தன் கருணையாகிய தேனைக் காட்டி, உலகத்தார் நகைக்கவும், யாம் மேன்மையாகிய முத்தியை அடையவும் எம்மை அடிமை கொண்ட வரலாற்றைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 7

இடைவிடாமல் நினைப்பவர்களுடைய மனத்தில் தங்கியிருப்பவனும், நினையாதவர்க்குத் தூரமாய் இருப்பவனும், திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருப்பவனும் வேதங்களை

Scanned with CamScanner

...யவனும், பெண்பாகனும், எம்மை ஆட்கொண்ட தலைவனும், தாய் போலும் [illegible] உடையவனும், உலகு எழிலும் தானே நிறைந்து அவற்றை ஆள்பவனும் ஆகிய சிவபெருமானைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 8

அன்பர் பாடும் பாடலைப் பரிசிலாகக் கொண்டருள்கின்ற பெண்பாகனும், திருப்பெருந்துறையை உடையவனும், தேவலோகத்தவரும் புகழும்படியான புகழை உடையவனும், மண்ணுலகத் தலைவனும், நெற்றிக் கண்ணனும் ஆகிய கடவுள் கூடற் பதியில், மண் சுமந்து கொண்டு பாண்டியன் கைப்பிரம்படியால் புண் பட்ட பொன்போலும் திருமேனியைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 9

பிறைச்சந்திரனை உடையவனும், வேதப் பொருளானவனும், திருப்பெருந்துறையானும், முப்புரி நூலை உடையவனும், இடபவாகனனும், நீலகண்டனும், சிவந்த திருமேனியையுடையவனும், திருவெண்ணீற்றை உடையவனும், பஞ்ச பூதங்களின் பலனும் ஆகிய சிவபெருமான் தன் பழவடியார்க்கு முடிவற்ற இன்பத்தைக் கொடுத்தருள்பவன். ஆதலால் அவனது பெருங் குணத்தை உலகம் எல்லாம் அதிசயிக்கும்படி புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 10

தேவதேவனும், அரசர்க்கரசனும், திருப்பாண்டி நாட்டை உடையவனும், பெண்பாகனும், அடியேனை ஆட்கொண்ட வனும் ஆகிய சிவபிரானைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 11

உமாதேவிபங்கனும், திருப்பெருந்துறையானும், திருவடியை அடைந்தவரின் மனம் உருக்கும் குணத்தை உடைய வனும், பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்கினவனும், தன் திருவடி யில் மனம் வைத்த அன்பர் மனத்தில் இருப்பவனும் ஆகிய சிவ பெருமானைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 12

திருமால் முதலியோர் தேடி நிற்க, என்னையும் தனது இனிய அருளால் இந்தப் பிறப்பில் ஆட்கொண்டு இனிமேலும் பிறவாமல் காத்தவனாய், உண்மையாகிய இடத்தில் தோற்றுபவனாய், எல்லா உயிர்களுக்கும் தானே ஒருமுதற் பொருளாய், எல்லா உயிர் களுக்கும் வீடுபேற்றுக்கு ஏதுவாய் இருக்கிறவன் ஆகிய சிவ பெருமானைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 13

Scanned with CamScanner

செந்நிறம் உடையவனும், திருவெண்ணீறு அணிந்தவனும், ஒருவராலும் அறிய முடியாதவனும், அன்பர்க்கு மெய்யனும், அன்பர் அல்லாதார்க்குப் பொய்யனும், அந்தணனும், திருவையாற்றில் வீற்றிருப்பவனும் ஆகிய சிவபெருமானைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 14

யானை முதலாகிய எல்லாப் பிறவிகளிலும் பிறந்தும் இறந்தும் இளைத்த என்னை உடலுருகச் செய்து, என்வினைகளை ஒழித்து, தேன் போல எனக்கு இனிமையைத் தந்து என்னைத் தன் திருத்தொண்டுக்கு உரியனாக்கின அச்சிவபெருமானது திருவடியைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 15

சந்திரன் உடலைத் தேய்த்தும் இந்திரனின் தோளை நெரித்தும் எச்சன் என்னும் போலித் தெய்வத்தின் தலையை அரிந்தும் சூரியனின் பல்லைத் தகர்த்தும் தேவர்களை விரட்டியும் தக்கன் யாகத்தில் அவமானப்படுத்தித் தண்டித்த சிவபெருமானது மந்தார மலர் மாலையைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 16

உடல், உயிர், உணர்வு,உருவங்களாகி, எம் முள்ளே கலந்திருந்து, தேன் போல இனிமை தந்து முத்தி நெறியை எமக்கு உணர்த்தியருளிய சிவபெருமான், அளவற்ற பல உயிர் களுக்கும் தலைவனாய் நின்ற விதத்தைப் புகழ்ந்து பேசுவோம்.

பாடல் எண் : 17

கொன்றைமலர் மாலையைச் சூடிச் சிவபெருமான் திருத்தோள்களைக் கூடித் தழுவி மயங்கி நின்று பிணங்குவேன்; அவனது செவ்வாயின் பொருட்டு உருகுவேன்; மனமுருகி அவன் திருவடியைத் தேடிச் சிந்திப்பேன்; வாடுவேன்; மகிழ்வேன். இங்ஙன மெல்லாம் செய்து நாம் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 18

கிளிமொழியாளாகிய உமாதேவி பாகனும், மால், அயன் என்போர் காண்பதற்கு அரிதாகிய அறிவுருவனும், அன்பர்க்குத் தெளிந்த தேன்போல்பவனும், திருப்பெருந்துறையில் எளிதில் வந்து எனக்கு அருள் செய்த அந்தணனும் ஆகிய சிவ பெருமானைப் புகழ்ந்து பாடுவோம்.

Scanned with CamScanner

# திருவாசகம்-திருவம்மானை

பாடல் எண் : 1

எழுந்தருளி, எம்மையும் எம்மினத்தையும் ஆட்கொண்டு எமக்கு முத்தி நெறியையும் அருள் செய்தமையால் அந்த இறைவனது கருணையையும், திருவடியின் பெருமையையும் யாம் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 2

மண்ணுலகத்தார் விண்ணுலகத்தவர் முதலிய எல்லாராலும் காண்பதற்கரியனானவனும், திருப்பெருந்துறையில் எழுந்தருளி என்னைப் பித்தனாக்கினவனும், முத்தி வழியை அறிவித்தவனும், வலை வீசுதல் முதலிய திருவிளையாடல்களைச் செய்தவனும் கருணைக் கடலும் ஆகிய சிவபிரானைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 3

இந்திரன் முதலான தேவர்களும் முனிவர் முதலானோரும் விண்ணிலே நிற்க, எங்களை ஆட்கொள்ளும் பொருட்டுப் பூவுலகில் எழுந்தருளி, எங்கள் மனத்தை உருகச் செய்த திருப்பெருந்துறையான், எமக்கு அருள் செய்த முடிவற்ற இன்பத்தைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 4

சாதாரண தேவர்களும், திருமால் பிரமன் இந்திரன் முதலான பெரிய தேவர்களும், காட்டில் சென்று கடுந் தவம் செய்தும் காண்பதற்கு அரியனாகிய சிவபெருமான் தானே வலிய வந்து, அடியேனைத் தாய்போலக் கருணை செய்து, என் உடல் உயிர்கள் உருகச் செய்தமையால், அவன் திருவடியைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 5

கற்றறிவு இல்லாமையால் கடையாகிய என்னையும் ஒரு பொருளாய் மதித்து ஆட்கொண்டு, கல்லை நிகர்த்த என் மனத்தைக் குழைத்துத் தன் கருணைக் கடலில் அழுந்தும் படிசெய்து என் வினையை ஒழித்தருளிய நம் சிற்றம்பலவனைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 6

தோழி! திருப்பெருந்துறையான் காட்டாதன எல்லாம் காட்டி, சிவகதியைக் காட்டி, தன் திருவடியைக் காட்டி, தன் கருணையாகிய தேனைக் காட்டி, உலகத்தார் நகைக்கவும், யாம் மேன்மையாகிய முத்தியை அடையவும் எம்மை அடிமை கொண்ட வரலாற்றைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 7

Scanned with CamScanner

இடைவிடாமல் நினைப்பவர்களுடைய மனத்தில் தங்கியிருப்பவனும், நினையாதவர்க்குத் தூரமாய் இருப்பவனும், திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருப்பவனும் வேதங்களை ஓதுபவனும், பெண்பாகனும், எம்மை ஆட்கொண்ட தலைவனும், தாய் போலும் மெய்யன்பு உடையவனும், உலகு எழிலும் தானே நிறைந்து அவற்றை ஆள்பவனும் ஆகிய சிவபெருமானைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 8

அன்பர் பாடும் பாடலைப் பரிசிலாகக் கொண்டருள் கின்ற பெண்பாகனும், திருப்பெருந்துறையை உடையவனும், தேவலோகத்தவரும் புகழும்படியான புகழை உடையவனும், மண்ணுலகத் தலைவனும், நெற்றிக் கண்ணனும் ஆகிய கடவுள் கூடற் பதியில், மண் சுமந்து கொண்டு பாண்டியன் கைப்பிரம்படியால் புண் பட்ட பொன்போலும் திருமேனியைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 9

, முப்புரி நூலை உடையவனும், இடபவாகனனும், நீலகண்டனும், சிவந்த திரு மேனியையுடையவனும், திருவெண்ணீற்றை உடையவனும், பஞ்ச பூதங்களின் பலனும் ஆகிய சிவபெருமான் தன் பழவடியார்க்கு முடி வற்ற இன்பத்தைக் கொடுத்தருள்பவன். ஆதலால் அவனது பெருங் குணத்தை உலகம் எல்லாம் அதிசயிக்கும்படி புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 10

தேவதேவனும், அரசர்க்கரசனும், திருப்பாண்டி நாட்டை உடையவனும், பெண்பாகனும், அடியேனை ஆட்கொண்ட வனும் ஆகிய சிவபிரானைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 11

உமாதேவிபங்கனும், திருப்பெருந்துறையானும், திருவடியை அடைந்தவரின் மனம் உருக்கும் குணத்தை உடைய வனும், பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்கினவனும், தன் திருவடி யில் மனம் வைத்த அன்பர் மனத்தில் இருப்பவனும் ஆகிய சிவ பெருமானைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 12

திமால் முதலியோர் தேடி நிற்க, என்னையும் தனது இனிய அருளால் இந்தப் பிறப்பில் ஆட்கொண்டு இனிமேலும் பிறவாமல் காத்தவனாய் உண்மையாகிய இடத்தில் தோற்றுபவனாய், எல்லா உயிர்களுக்கும் தானே ஒருமுதற் பொருளாய், எல்லா உயிர்

Scanned with CamScanner

இடைவிடாமல் நினைப்பவர்களுடைய மனத்தில் தங்கியிருப்பவனும், நினையாதவர்க்குத் தூரமாய் இருப்பவனும், திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருப்பவனும் வேதங்களை ஓதுபவனும், பெண்பாகனும், எம்மை ஆட்கொண்ட தலைவனும், தாய் போலும் மெய்யன்பு உடையவனும், உலகு ஏழிலும் தானே நிறைந்து அவற்றை ஆள்பவனும் ஆகிய சிவபெருமானைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 8

அன்பர் பாடும் பாடலைப் பரிசிலாகக் கொண்டருள் கின்ற பெண்பாகனும், திருப்பெருந்துறையை உடையவனும், தேவலோகத்தவரும் புகழும்படியான புகழை உடையவனும், மண்ணுலகத் தலைவனும், நெற்றிக் கண்ணனும் ஆகிய கடவுள் கூடற் பதியில், மண் சுமந்து கொண்டு பாண்டியன் கைப்பிரம்படியால் புண் பட்ட பொன்போலும் திருமேனியைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 9

, முப்புரி நூலை உடையவனும், இடபவாகனனும், நீலகண்டனும், சிவந்த திரு மேனியையுடையவனும், திருவெண்ணீற்றை உடையவனும், பஞ்ச பூதங்களின் பலனும் ஆகிய சிவபெருமான் தன் பழவடியார்க்கு முடி வற்ற இன்பத்தைக் கொடுத்தருள்பவன். ஆதலால் அவனது பெருங் குணத்தை உலகம் எல்லாம் அதிசயிக்கும்படி புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 10

தேவதேவனும், அரசர்க்கரசனும், திருப்பாண்டி நாட்டை உடையவனும், பெண்பாகனும், அடியேனை ஆட்கொண்ட வனும் ஆகிய சிவபிரானைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 11

உமாதேவிபங்கனும், திருப்பெருந்துறையானும், திருவடியை அடைந்தவரின் மனம் உருக்கும் குணத்தை உடைய வனும், பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்கினவனும், தன் திருவடி யில் மனம் வைத்த அன்பர் மனத்தில் இருப்பவனும் ஆகிய சிவ பெருமானைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 12

திமால் முதலியோர் தேடி நிற்க, என்னையும் தனது இனிய அருளால் இந்தப் பிறப்பில் ஆட்கொண்டு இனிமேலும் பிறவாமல் காத்தவனாய் உண்மையாகிய இடத்தில் தோற்றுபவனாய், எல்லா உயிர்களுக்கும் தானே ஒருமுதற் பொருளாய், எல்லா உயிர்

Scanned with CamScanner

களுக்கும் வீடுபேற்றுக்கு ஏதுவாய் இருக்கிறவன் ஆகிய சிவ பெருமானைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 13

செந்திறம் உடையவனும், திருவெண்ணீறு அணிந்தவனும், ஒருவராலும் அறிய முடியாதவனும், அன்பர்க்கு மெய்யனும், அன்பர் அல்லாதார்க்குப் பொய்யனும், அந்தணனும், திருவையாற்றில் வீற்றிருப்பவனும் ஆகிய சிவபெருமானைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 14

யானை முதலாகிய எல்லாப் பிறவிகளிலும் பிறந்தும் இறந்தும் இளைத்த என்னை உடலுருகச் செய்து, என்வினைகளை ஒழித்து, தேன் போல எனக்கு இனிமையைத் தந்து என்னைத் தன் திருத்தொண்டுக்கு உரியனாக்கின அச்சிவபெருமானது திருவடியைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 15

சந்திரன் உடலைத் தேய்த்தும் இந்திரனின் தோளை நெரித்தும் எச்சன் என்னும் போலித் தெய்வத்தின் தலையை அரிந்தும் சூரியனின் பல்லைத் தகர்த்தும் தேவர்களை விரட்டியும் தக்கன் யாகத்தில் அவமானப்படுத்தித் தண்டித்த சிவபெருமானது மந்தார மலர் மாலையைப் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 16

உடல், உயிர், உணர்வு, உருவங்களாகி, எம் முன்னே கலந்திருந்து, தேன் போல இனிமை தந்து முத்தி நெறியை எமக்கு உணர்த்தியருளிய சிவபெருமான், அளவற்ற பல உயிர் களுக்கும் தலைவனாய் நின்ற விதத்தைப் புகழ்ந்து பேசுவோம்.

பாடல் எண் : 17

கொன்றைமலர் மாலையைச் சூடிச் சிவபெருமான் திருத்தோள்களைக் கூடித் தழுவி மயங்கி நின்று பிணங்குவேன்; அவனது செவ்வாயின் பொருட்டு உருகுவேன்; மனமுருகி அவன் திருவடியைத் தேடிச் சிந்திப்பேன்; வாடுவேன்; மகிழ்வேன். இங்ஙன மெல்லாம் செய்து நாம் புகழ்ந்து பாடுவோம்.

பாடல் எண் : 18

கிளிமொழியாளாகிய உமாதேவி பாகனும், மால், அயன் என்போர் காண்பதற்கு அரிதாகிய அறிவுருவனும், அன்பர்க்குத் தெளிந்த தேன்போல்பவனும், திருப்பெருந்துறையில் எளிதில் வந்து எனக்கு அருள் செய்த அந்தணனும் ஆகிய சிவ பெருமானைப் புகழ்ந்து பாடுவோம்.

Scanned with CamScanner

அலகு - 3

## பெரியாழ்வார் - திருமொழி

என் வாக்கில் தூய்மை இல்லை. அதனால் அடியேன் உன்னைப் போற்றும் தன்மை இல்லாதவனாக இருக்கிறேன். என்னுடைய நாவானது உன் நாமத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. எம்பெருமானே! கருடக் கொடியை உடையவனே! நான் கூறும் என் பேச்சுகளில் நல்லவற்றையே நீ ஏற்றுக் கொள்ள வேண்டும்.

"சழக்கு நாக்கொடு புன்கவி சொன்னேன்"
சங்கு சக்கர மேந்துகை யானே!

அதாவது சக்கரம் சங்கும் திருக்கரங்களை உடையவனே! குற்றமுடைய என் நாவினால் இழிவான கவிதையைக் கூறினேன். உன்னைத் தவிர வேறு எவரும் இல்லை. புன்சிறுமைக்கு ஒரு புள்ளி அதிகமானால் அஃது பாரமாக இல்லாததைப் போல அடியேன் செய்யும் தவறுகளை ஏழு உலகங்களையும் உண்டவனே!

நன்மை, தீமை, என எதுவும் அறியாதவன் நான்! என்னுடைய இழிந்த செயலால் இச்சகமாக பேசி உன்னைப் புகழ்ந்து பேசவும் அறியேன், ஓய்வில்லாமல் "ஓம் நமோ நாராயணாய" என்னும் எட்டெழுத்து மந்திரத்தையே எப்பொழுதும் கூறிக் கொண்டிருப்பவனே! இறைவா உன்னை வணங்கும் முறையையும், அறியாதவனாக இருக்கின்றேன். "ஸ்ரீவைணவன்" என்னும் தகுதி ஒன்று அன்றி வேறு ஒன்றை எதுவும் அடியவனிடத்து அமைந்திருக்கவில்லை.

Scanned with CamScanner

ஓங்கி வளர்ந்தவன்!:-

ஓங்கி உயர்ந்து திரிவிக்கிரமனாக அவதாரம் ஏற்று ஏழு உலகங்களையும், அளந்த திருமாலே! உன் தந்தை வாசுதேவனின் நால் வாழ்க்கை அளித்தவனே! உன்னிடம் உலகும் உடையும், உண்ணும் சோறும், அடியவர்களை அடியேன் பெற வரம் பலவில்லை! உன் திருவடி நிழலே, நிலம், கொண்டு, ஆகிய எல்லா வளங்களையும், குறைவு இல்லாமல் என் மனதளவில் கொடுக்க பெற்றேன், தர்மம் என்னை விட்டு நீங்க அடியேனை ஆட்கொள்ள வேண்டும்,

ஒப்பற்ற சிறப்பு உடையவன்!:-

உன் அடியவனான நான் உணவு உண்ணும் இருக்கும் போது எனக்கு பசி ஏற்படுவதில்லை. அடியேன் இடைவிடாமல் "ஓம் நமோ நாராயணாய" என்னும் எட்டெழுத்து மந்திரத்தை எண்ணாத நாள்களும் யஜுர், சாம, ரிக், என்னும் மூன்று வேதங்களின் மூலம் மந்திரங்களால் உன் திருவடிகளை வணங்க கிட்டாத நாள்களும், எனக்குப் பட்டினி நாள்களே!

தூய்மையான பாற்கடலில் பாம்பைப் படுக்கையாக கொண்டவன், இரு கைகளையும், கூப்பிப் பார்த்து அஃது அடியேனுக்குக் கிடைக்காமையால் என் இரு கண்களாலும், இருந்து கிடைக்காமையை நீயே எனக்கருள் வேண்டும்.

Scanned with CamScanner

புகவென்னை யெய்கிற்றியே

சிறிய வெண்மணல்களைக் கொண்டு வீதிகளை அலங்கரித்தலும் நாட்காலே நீராடுதலும், ஸமித்துக்களை நெருப்பிலிட்டுத் தீவளர்த்தலும் இங்குக் காமநோன்புக்கு உறுப்பாகச் செய்யுமவை யென்க. கள்ளி ஸ்ரீ இளவிறகு. முயன்று ஸ்ரீ எம்பெருமான்றானே வந்து நம்மை ஸ்வீகரிக்க நிற்றல் ஸ்வரூபாநு ரூபம் என்று அறுதியிட்டு நிற்கக் கடவளான நான் இபபோது அவனைப் பெறுகைக்குச் செய்யும் முயற்சி இது காணாய் என்கை

3. மத்தநன் னறுமலர் முருககமலர்

கொண்டுமுப் போதுமுன் னடிவணங்கி

தத்துவ மிலியென்று நெஞ்செரிந்து

வாசகத் தழித்துன்னை வைதிடாமே

கொத்தலர் பூங்கணை தொடுத்துக்கொண்டு

கோவிந்த னென்பதோர் பேரேழுதி

வித்தகன் வேங்கட வாணனென்னும்

விளக்கினில் புகவென்னை விதிக்கிற்றியே

மன்மதன் ரஜோகுண ப்ரசுரனாதலால் மதகரமான மலர்கள் அவனுக்கு இடத்தக்கவையென்று கொண்டு ஊமத்தை மலர்களையும் முருக்க மலர்கள்ளயுமிடுகிறபடி முப்போது - இரண்டு சந்தியும் ஒரு உச்சிப்போதும்

4. சுவரில் புராணநின் பேரேழுதிச்

சுறவநற் கொடிகளும் துரங்கங்களும்

கவரிப் பிணாக்களும் கருப்புவில்லும்

காட்டித்தந் தேன்கண்டாய் காமதேவா

அவரைப் பிராயந் தொடங்கிஎன்றும்

ஆதரித் தெழுந்தவென் தடமுலைகள்